1967 ஜூலை 18]

*குறுகிய கால வினா எண் 6—திரு. டி. இராசரத்தினம்: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965–66 ஆண்டுகளில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வாங்க வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு? எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது.

(இ) கடன் பெற்ற அனைவரும் மேற்படி கடன் தொகையினை பெற்ற காரியத்திற்கு பயன்படுத்திவிட்டனரா?

(உ) இல்லையெனில், அன்னாரின் பெயர்களும் தொகையும் தெரிவிப்பதுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்காக ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் 46 பேர்களுக்கு ரூபாய் 1,33,000 அளவுக்கு 1965–66ம் ஆண்டில் கடன்கள் வழங்கப்பட்டன.

(இ) கடன் பெற்றவர்களில் சிலர் இதுவரையில் கறவை மாடுகளை வாங்கவில்லை.

(உ) அரசு வழங்கிய கடன்தொகை கொண்டு கறவை மாடுகள் வாங்காதவர்களின் பெயர், இவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ஆகிய விவரங்கள் வருமாறு:—

	பெயர்.	வழங்கப்பட்ட கடன் தொகை. ரூ.
1	திரு. வி. கணபதி நாயக்கர், ஸ்ரீபெரும்புதூர்	3,000
2	திரு. பட்டாபிராமன் நாயக்கர், வெண்காடு	2,000
3	திரு. எஸ். ஏ. எஸ். காதர், ஸ்ரீபெரும்புதூர்	5,000
4	திரு. எஸ். ஏ. எஸ். மெஹபூப் சாகேப், ஸ்ரீபெரும்புதூர் ..	5,000
5	திரு. ஜே. மதன்ராஜ், பூவிருந்தவல்லி	5,000
6	திரு. சக்ரபாணி, சென்னீர்குப்பம்	4,000
7	திரு. என். புருஷோத்தம் ரெட்டியார், வரதராஜபுரம் ..	4,000

சென்னீர்குப்பத்தைச் சேர்ந்த திரு. சக்ரபாணியிடமிருந்து கடன் தொகை முழுவதும் வட்டியுடன் வசூலிக்கப்பட்டது. மற்றவர்களிடமிருந்து கடன்தொகை முழுவதையும் வட்டியுடன் வசூலிக்க அவர்களுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

திரு. டி. இராசரத்தினம்: மாடுகள் வாங்கப்படவில்லை என்றால் அவர்கள் மீது எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: சர்க்காரிடம் மாடுகள் வாங்குவதற்காக கடன் பெற்றவர்கள் மாடுகள் வாங்காததால் தொகையைத் திருப்பித் தரவேண்டுமென்று மார்ச் மாதத்திலே நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: இந்தக் கடனை வாங்குகிறவர்கள் மாடுகள் வாங்காமல் தங்கள் சொந்த உபயோகத்திற்கு உபயோகித்துக் கொண்டால், அவர்களிடமிருந்து ஏதாவது கொடுத்த பணத்தை வசூல் பண்ணுகிற முறையிலே இருந்தால்தானே இனிமேலாவது அப்படிப்பட்ட முறையிலே பணத்தை உபயோகப்படுத்தாமல் இருப்பார்கள். ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சர்க்கார் வழங்குகிற கடனை எந்தக் காரியத்திற்காக வழங்கப்படுகிறதோ, அதைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றுதான் வழங்கப்படுகிறது. மாடுகள் வாங்கவில்லையென்றால்

அதற்காக கடனுக வாங்கியிருந்த பணத்தைப் பயன்படுத்திக் கொண்டால் அவர்கள் வட்டியையும், கடனையும் சேர்த்து கொடுக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. அவர்கள் வேண்டுமென்றே மாடுகள் வாங்கவில்லை என்று தெரிகிற நேரத்திலே, கொடுத்த பணத்தைத் திருப்பி பெறுவதற்கு சகலவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற கடன்களில் குறிப்பாக ஒருவரிடமிருந்து மட்டும் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வசூலிக்கப்பட்டுக் கொடுத்தவர் திராவிட கழகத்தைச் சார்ந்தவர். மற்றவர்களில் இரண்டு பேர் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாகவும், காங்கிரசுக்குத் தீவிரமாக உழைத்தவர்களாகவும் இருக்கிற காரணத்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், மற்றவர்கள் பேரில், அவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்ற காரணத்திற்காக, நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் சொன்ன விவரத்திலிருந்து நான் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் எனக்குத் தெரிந்த வரையிலும் சொல்வேன்—திரு. மதன்ராஜ் என்பவர் பூவிருந்தவல்லி பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்றும், திரு. காதர் என்பவர் ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்றும் எனக்குத் தெரியும். இது ஸ்ரீபெரும்புதூர் தொகுதியைச் சேர்ந்த விவகாரமாக இருக்கிறது. அதனால் இத்தகைய பாகுபாடு கவனத்திற்குரியது. ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்தக் கட்சி என்று பார்க்காமல், யார் கடன்பட்டிருந்தாலும், பெற்ற கடனைக் கொண்டு மாடுகள் வாங்காமலிருந்தால், கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதிலே இந்த அரசாங்கம் எந்தவிதத் தயக்கமும் காட்டாது ; அவசியம் கடனைத் திரும்பிப் பெறும்.

திரு. கே. விநாயகம் : ஐயா, மேலே குறிப்பிட்ட நபர்கள் மாடுகள் வாங்குவதற்காகக் கடன் வாங்கி, நல்ல தரமான மாடு இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்லி, அதைத் தேடி அலைந்துகொண்டிருக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? (சிரிப்பு) கடன் தொகையை உடனடியாக வசூலிக்காமல், அவர்கள் மாடு வாங்குவதற்குரிய காலத்தைக் கொஞ்சம் நீட்டிப்போட முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்தக் கடன் பெற்ற நண்பர்கள் மாடு வாங்கப் போன போது நண்பர் திரு. விநாயகத்தையும் அழைத்துச் சென்று ஏமாற்றம் அடைந்தார்களா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

திரு. வி. கே கோதண்டராமன் : கிராமங்களில் இப்படிக் கறவை மாடுகள் வாங்குவதற்குரிய கடன் தொகையைக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக வாங்க வேண்டுமானால், 500 ரூபாய் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஆனால், தேர்தலுக்கு ஒரு வருஷத்திற்கு முன்னாலே இந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலுக்காக வேண்டி, ஆட்களைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும், தாஜா பண்ணி வைக்க வேண்டும் என்பதற்காகவே இப்படிப் பணம் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானே ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஸ்ரீபெரும்புதூர் தொகுதியாக இருக்கிறது. தேர்தலுக்கு முன்னாலே கொடுக்கப்பட்டிருப்பதால் கனம் அங்கத்தினர் யூகிப்பது சரியாக இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 389, 390, 391, 392 ஆகியவை தற்போதைக்குத் தள்ளிவைக்கப்படுகின்றன. பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.